ஜெய விஜயகாலி.

மலர்-1    இதழ்-[illegible]

ஏப்ரல்-௨௨-1927.

[illegible]

J684m211,N27
N27.1.1
159605

''ஏல விவசாயி'' க்கு அனுபந்தம்.

# H. H. சேதுலட்சுமி பாயி.

OFFICE OF THE REGISTRA... NOV 1927



மகாராணி ரீஜண்ட், திருவாங்கூர்.

# ஏல விவசாயி.

170

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து
வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை.

ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
  ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
  ஞானம் வந்தாற்பின் நமக்கேது வேண்டும்?

(பாரதியார்)

*ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.*

மலர் 1 } உத்தமபாளையம், பிரபவ ௵ சித்திரை ௴ 1927-௵ ஏப்பிரல்-மே௴ { இதழ் 1

## கடவுள் வணக்கம்.

*ஆத்திச்சூடி யிளம்பிறை யணிந்து*
*மோனத்திருக்கு முழுவெண் மேனியான்,*
*கருநிறங் கொண்டுபாற் கடல் மிசைக் கிடப்போன்,*
*மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்,*
*ஏசுவின் தந்தை யெனப்பல மதத்தினர்*
*உருவகத் தாலே யுணர்ந்துண ராது*
*பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்*
*ஒன்றே; அதனியல் ஒளியுறு மறிவாம்;*
*அதனிலை கண்டார் அல்லலை யகற்றினர்;*
*அதனருள் வாழ்த்தி யமரவாழ் வெய்துவோம்.*

சுப்ரமண்ய பாரதி.

159605
N27,101

# முகவுரை

எல்லாம் வல்ல முழு முதற்கடவுளின் திருவருள் துணையைக்கொண்டு இப்புதிய மாசிகைக்கு சில வார்த்தைகள் முன்னுரையாகக் கூறுகிறேன். சர்க்காரின் வரிப் பளுவாலும், ஏலத்தின் விலைக் குறைவாலும், ஒற்றுமை யின்மையாலும் ஒரு வருடமல்ல இரு வருடமல்ல அநேக வருடங்களாக ஏல விவசாயிகள் கஷ்ட நஷ்டங்களை அடைந்து வந்தார்கள். அக்காலத்தில் இவ் விவசாயிகள் மிக்க கேவலமான நிலைக்கு வந்து விட்டார்களென்றே சொல்ல வேண்டும். அந்த நிலைமையில் அப்பொழுது திருவாங்கூர் திவானாக இருந்தவரும், மைசூர், பரோடா முதலிய சமஸ்தானங்களில் அதிகமான சீர்திருத்தங்கள் வழங்கி, அவைகளை அதி மேன்மைக்குக் கொண்டு வந்த வருமான கனம். வி. பி. மாதவராவ் அவர்கள் ஏலமலைக்கு விஜயம் செய்து, ஏல விவசாயிகள் துன்பங்களைக் கண்ணாரக்கண்டு, கருணைகூர்ந்து ஏக்கர்1-க்கு 6—4—0 ரூ. தீர்வையிலிருந்து தற்சமயமிருக்கும் தீர்வைக்குக் குறைத்திருக்காவிட்டால், ஏலத்தோட்டங்களெல்லாம் புல், பூண்டு முளைத்து, புதராகி, அடர்ந்து, காடுகளாய்ப் போயிருக்கும். வரிப்பாரம் இலகுவானதின் மூலமாக ஏலத் தோட்டங்கள் பலவிடங்களில் பெருகின, ஏல விவசாயிகள் செழிப்புற்றார்கள்.

ஏலக்கிருஷி பெருகியும், வரிப்பளு குறைந்தும், ஏலத்தின் விலை ஏறாதது ஏல விவசாயிகளுக்கு ஏக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தது. இதைப்பற்றி ஒவ்வொரு அங்கத்தினருக்கும் நன்கு தெரியுமாகையால் சென்ற காலத்தைப்பற்றி பன்னிப் பன்னிப் பகருவதில் பலன் தான் என்ன! ஒன்றுமில்லையாகையால் விட்டு விட்டு மேலே செல்கின்றேன்.



"வஞ்சநமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும்
அஞ்சி உனை அடைந்தேன் ஐயா பரா பரமே" என்று

தவராஜ சிங்கமாம் சிவஞானச் செல்வர் தாயுமானவர் உருகி, உருகிக் கதறியது போல, அர்த்த சாஸ்திர உபாயத்திற்கும், வியாபார தந்திரத்திற்கும் அப்பால் விலக்கி, நமது பொருளாதார அடிமைத் தனத்தை நீக்கி, அறியாமையை அகற்றி, வறுமையை நிர்மூலம் செய்து நம்மவர்களுக்கு உயர்வினை அளிக்க வேண்டுமென்ற முக்கிய முதல் நோக்கத்துடன் நமது அரும்பெருந் தலைவர்கள் நமதிடையில் பெரிய முயற்சிகளும், கிளர்ச்சிகளும் செய்து கடைசியில் திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் என்ற நம் சங்கத்தை ஏற்படுத்தினார்கள். இதன் பயனாக நாம் நல்ல ஒற்றுமையும், நல்ல லாபமும், நல்ல உயர்வும் பெற்றோம், பெற்றுக் கொண்டிருக்கிறோம். அனுபவ பூர்வமாக அநேக நன்மைகளை அடைந்திருக்கிறதுமன்றி, பொருளாதார சுயாதீனமும் கூடிய மட்டில் அடைந்திருக்கிறோம். இதை விரிக்கில் பெருகும்.

சங்கங்களையே அடிப்படையாகக் கொண்ட ஒற்றுமை இயக்கமானது நமது தேசத்தில் பெரிய நகரங்களிலும், சிறிய கிராமங்களிலும் காட்டுத் தீபோன்று பரவி வருவதானது போற்றத் தக்கதாயிருக்கின்றது. இவ்வியக்கம் நமது சங்கத்திற்கும் அஸ்திவாரமே. நமது சங்கமானது ஒரு பெரிய ஸ்தாபனம், ஒரு பெரிய சாதனம், ஒரு பெரிய ஆயுதம். தென்னிந்தியாவில் இவ்வளவு விவசாய அங்கத்தினர்கள் அடங்கி, இவ்வளவு வரவு செலவு செய்கிற சங்கங்கள் மிகச் சிலவேயிருக்கின்றன. நமது சங்கம் ஓங்கி வளர்ந்து வருகிறது. தீவிரமாக வேலை செய்திருந்தால், நமது சங்கத்தின் பிரதிநிதிகள் இப்பொழுது சட்ட சபையிலும், பிரஜா சபையிலும் வெற்றியுடன் வீற்றிருக்கக்கூடும். இன்னும் சுருங்கச்சொன்னால் நமது சங்கத்தின் சரித்திரமே வேறு விதமாக இருக்கக்கூடும். விருதுநகர், பம்பாய், கல்கத்தா, காரச்சி முதலிய விடங்களிலுள்ள இந்நாட்டு ஏல வியாபாரிகளும், அயல் நாடுகளிலுள்ள அந்நாட்டு வியாபாரிகளும், நமது சங்கத்தின் ஒற்றுமை யென்னும் மணி ஓசையைக் கேட்டு, இன்னதுதான் செய்வதென்று தெரியாது திகைத்து

விட்டார்கள் என்றால், நமது சங்கத்தின் ஒற்றுமையின் பலத்தை விரித்துக் கூறுவது அவசியமின்று. நமது திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் என்றும் நின்று, நிலவி, எல்லா நலன்களையும் என்றும் நல்கவேண்டுமென்றும், அதன் மூலம் ஏல விவசாயிகள் மகா மேன்மை அடைய வேண்டுமென்றும் எங்கும் நிறைந்திருக்கும் இறைவனது இன்னருளை வாழ்த்தி வணங்குகிறேன்.

விவசாயம், கல்வி, கைத்தொழில், வாத்தகம், வைத்தியம், கலைகள் முதலிய சகல வித சாஸ்திரங்களில் அபிவிர்த்தி அடைந்திருப்பதே ஒரு தேசத்தின் முன்னேற்றத்திற்கு அடையாளம். அவ்வாறு அடைவதற்கு மூக்கிய முதற் சாதனம் பத்திரிகைகளேயாம். ஓர் தேசமோ, சமூகமோ, பாஷையோ, கட்சியோ, மதமோ, வேறு எந்த விஷயமோ விருத்தியடைய வேண்டுமாயின், பத்திரிகைகளினாலேயே இலகுவில் முடியும் என்பதையும், அநேகம் பிரசாரர்கள் செய்யும் வேலையை மிக்க இலகுவில், சொற்பகாலத்தில், அற்பசெலவில் சிரமமின்றி பத்திரிகைகளுக்குச் செய்யும் சக்தி உண்டு என்பதையும் எவர்தான் மறுக்கமுடியும்? முன்னேற்றமடைந்திருக்கும் எத்தேசங்களிலும் பத்திரிகைகள் ஏராளமாக வெளிவருவது எவரும் பிரத்தியட்சத்தில் காணும் விஷயமாகும். பிரான்ஸ் தேசத்தில் பிச்சைக்காரர்களுக்குங்கூட. பத்திரிகை பதிப்பிக்கப்படுகிறதென்று வியப்புடன் சிரிப்புடன் கூறுகின்றேன். இன்னும் பத்திரிகை உலகத்திற்கு அரசனாக விளங்கிய லார்ட் நார்த்கிளிப் அநேக அரிய பெரிய காரியங்களை இலகுவாய், சாமார்த்தியமாய் செய்து முடித்தார் என்பது பத்திரிகானுபவம் சிறிது பெற்ற எவருக்கும் நன்றாய்த்தெரியும். ஜெர்மன் மாஜிகெய்சர் என்ன செய்து கொண்டு ஜீவிக்கிறார்? பத்திரிகைகளுக்கு எழுதியே. மாஜி முதல் மந்திரி லாயிட் ஜார்ஜ் என்ன செய்து கொண்டு பிழைக்கிறார்? பத்திரிகைகளுக்கு எழுதியே. இந்தியா மந்திரியாயிருந்த மாண்டேகுவும் என்ன செய்து கடைசியில் வாழ்ந்தார்? பத்திரிகைளுக்கு எழுதியே. அயல் தேசத்தில் கணக்கற்ற மனிதர்கள் பத்திரிகைத் தொழில் செய்து



ஜீவிக்கிறார்கள். அங்கு ஒருவன் ஒரு நாள் உணவில்லாமல் காலம் கடத்தினாலும் பத்திரிகை படிக்காமல் காலம் கழிக்கவிரும்பமாட்டான். பாத்திர பண்டங்கள் நமக்கு எப்படித் தேவையோ அப்படியே அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் முதலிய தேச ஜனங்களுக்குப் பத்திரிகைகள் தேவை தேவை யென்று சொல்லத் தேவையில்லை.

முன்பு கேவலமாயிருந்த ஜப்பான் தேசம் இப்பொழுது இருக்கும நிலை யென்ன? எத்தேசத்தாரும் கௌரவிக்குமாறு எல்லா வழிகளிலும் மிக்க மேன்மையாகவும், அது வல்லரசுகளில் ஒன்றாகவும் விளங்குகிறது. காரணம்? கண் கட்டு வித்தையாலல்ல, மாயத்தாலல்ல, மோசத்தாலல்ல, ஆனால் ஜப்பானியர்களின் பத்திரிகாபிமானமும் தேசாபிமானமுமேயாம். அவர்கள் தங்கள் சர்க்காரைக்கொண்டு மடமைச் செடியை ஆணிவேருடன் களைந்தெடுத்து வென்னீர் ஊற்றி நாசப்படுத்தினார்கள். கால் நூற்றாண்டுகளுக்கு முன் ஜப்பானில் பத்திரிகை என்ற பெய்ரே கிடையாதிருந்தும், இப்பொழுது அங்கு சுமார் 4000 பத்திரிகைகள் நடைபெற்று வருகின்றன என்று அறிய எவருக்குத்தான் ஆச்சர்யமாக விராது. அங்கு பிரசுரமாகும் "அஸாஹி" க்கு 21,00,000 மும், "ஒஸகா மைனிச்சி" க்கு 10,00,000 மும், "டிஸீஸ் கிம்போ" க்கு 400,000 மும் சந்தாதாரர்கள் இருக்கின்றார்கள். இன்னும் அங்குள்ள சில பத்திரிகைகளுக்கு பல லட்சக்கணக்கான சந்தாதார்கள் இருப்பார்கள் அல்லவா? 1881 ௵-த்தில் 30,000 என் மூலதனத்துடன் (1 என் = ரூ 1—8—0) ஏற்படுத்தப்பட்ட "அஸாஹி" க்கு 1922 வருஷத்தில் 4,000,000 என் ஆகப் பெருகியிருக்கிறது 50,000 என் மூலதனத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட "ஒஸகா மைனிச்சி" க்கு 1925 வருடத்தில் 5,000,000 என் ஆக விருத்தியாகியிருக்கிறது என்றால், அந்நாட்டில் அப்பத்திரிகைகளின் செல்வாக்கையும் அபிவிருத்தியையும் கவனியுங்கள்.

இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய நாகரிக நாடுகளில் பல லட்சக்கணக்கான சந்தாதார்களுடைய பல

பத்திரிகைகள் இருக்கின்றன. பலவித இயக்கங்களுக்கும், பலவித தொழில்களுக்கும் பல பத்திரிகைகள் உண்டு. நமது நாட்டாருக்கு, அடிமையில் அழுந்திக்கிடக்கும் நமது நாட்டாருக்கு இது ஒரு பெரிய பாடமாகும். பத்திரிகை யுகமாகிய இக்காலத்தில் ஓர் பாமரரும் அற்ப பிரயத்தினத்தால ஏற்ற அறிவாளியாகுதல் கூடும். குடிகளின நன்மை, தீமைகளை அறிவதற்கு பத்திரிகைகள் போன்ற சாதனம் வேறு கிடையாது. உலகானுபவம் அடைவதற்கு பத்திரிகை வாசித்தலே ஏற்றவழி. தற் காலத்தில் ஒரு அரசாங்கம் நன்கு நடைபெறுவதற்கு பத்திரிகைகளின் உதவி அவஸியமாகத் தேவை.

பத்திரிகை வாழ்விற்கு வேண்டிய தத்துவங்களை உபதேசிப்பதால் ஆசிரியனாகவும், செவிக்கினியவைகளை, சிந்தைக்கினியவைகளைத் தேடி ஏற்ற காலத்தில் சந்தோஷத்துடன் உதவுவதால் தாயாகவும், நற்கல்விகளை பருவபேதங்களுக்குத் தகுந்தவாறு பயிற்றுவதால் தந்தையாகவும், குற்றங்களைக் கூறி திருத்தங்கள் செய்வதால் நண்பனாகவும், உள்ளதை உள்ளபடி எடுத்துக்கூறி, துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்வதால் நீதி மன்னனாகவும், அயலிடத்து விஷயங்களை அறிவிப்பதால் தூதனாகவும் நமக்கு விளங்குகிறது. தேசங்களின் சட்ட திட்டங்களை ஆக்குவதும், அழிப்பதுவும், சங்கங்களைக் கூட்டுவதும், குலைப்பதுவும், கலகங்களை உண்டாக்குவதும், ஒழிப்பதுவும், அரசாங்கங்களை அமைப்பதுவும், அதோ கதியாகச் செய்வதுவும, ராஜாங்க உயர்தர உத்தியோகஸ்தர்களை நியமிப்பதுவும், நீக்குவதும், உடன்படிக்கைகளை உறுதிசெய்வதும், உடைப்பதுவும் பத்திரிகைகளின் வேலைகளே. பத்திரிகைகளின் பயன்களை இன்னது இன்னது என்று எழுதினால் இவ்வியாசம் இப்பொழுது இறுதியாகாது.

சுருங்கச் சொன்னால் பத்திரிகைகளின் மூலம் தான் இவ்வளவு உன்னத நிலை அடைந்திருக்கிறது தற்கால உலகம் என்று எவரும் ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியாது. சென்னை மாகாணத்தில் அதிக வரிக்காரர்களுடைய பத்திரிகை இங்கி



லீஷில் வெளியிடப்படும் ஹிந்து பத்திரிகையேயாம். இதற்குக் கூட 10,000 சந்தாதாரர்களுக்கு மேலில்லையாம். ஆங்கிலப் பத்திரிகைகளுக்குள்ள செல்வாக்குங்கூட தமிழ் உலகில் வெளிவரும் தமிழ் பத்திரிகைகளுக்கில்லையென்றால் தமிழ் நாட்டின் தேசாபிமானிக்கும், பாஷாபிமானிக்கும் எவ்வளவு வெட்கம்! அநேகர் சுதேசப் பத்திரிகைகளை வரவழைத்து வாசிப்பது கௌரவத்திற்கு குறைவு என்று நினைக்கின்றனர். இதைப் போன்ற அறியாமை வேறில்லை. இக்காரணத்தால்தான் நம் நாட்டில் பல பத்திரிகைகள் தோன்றி ஆதரிப்பாரின்றி அழிந்தன. தமிழகத்தில் பல பத்திரிகைகள் இருப்பினும் அவைகள் உரம் பெற்று வருவதாகத் தெரியவில்லை. தமிழ் தேசத்தில் சில பத்திரிகைகளே நெருக்கடியான எந் நிலைமையையும் சரி செய்து கொண்டு முன்னிலையில் நிற்கின்றன. எந்நோக்கத்துடன் பத்திரிகை நடைபெறுகிறதோ அந்நோக்கத்திற்குரிய அனைவரும் அதனை ஆதரித்தால்தான் அது வளரும், வளரும், வளமாய் வளரும. அயல் நாடுகளில் எங்கும் பத்திரிகைகள், எதற்கும் பத்திரிகைகள் காணப்படுகின்றன.

சீரும், சிறப்பும் பெற்றது நமது தொழிலாம் விவசாயம் என்பதை உலகத்தில் அனைவரும் ஒப்புக்கொள்ளுவர். நமது விவசாயமோ மலை விவசாயம். "எது வந்தாலும் மலை தான் தாங்கும்." என்று நம்மிடையில் வழங்கும் நாட்டுப் பழமொழியே நமது உயர்வை விளக்குகிறது. மலைப் பிராந்தியங்களில் உற்பத்தியாகும் ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், லவங்கம் முதலிய வாசனைத் திரவியங்களில் ஏலத்தையே முதன்மையாகச் சொல்லுகிறோம். ஏலம் கிராய்பு . * * * * என்று ஜனங்களுள் சொல்லும் வழக்கமும் உண்டாகிவிட்டது. கொலம்பஸ், மார்கோ போலோ, வாஸ்கோடி காமா முதலிய அயல் நாட்டினர்களை இந்தியாவிற்கு இழுத்தது நமது வாசனைத் திரவியங்களல்லவா? குடகு, ஆவேரி, மைசூர், சேர்வராயமலை, இலங்கை, சுமத்திரா முதலிய இடங்களில் உண்டாகும் ஏலத்தைக் காட்டிலும் நமது ஏலமே உயர்ந்ததென அக்கால முதல் இக்காலம் வரை மதிக்கப்பட்டு வருகிறது. இதைப்பற்றிய வியாசங்கள் அடிக்கடி இதில் வெளிவரும்.

நமது சங்கம் ஏற்பட்ட காலமுதல் பத்திரிகை யொன்று சங்க சார்பில் வெளியிடப்பட வேண்டுமென சிலர் அடிக்கடி பேசினார்கள். கடைசியில் பொதுக் கூட்டம் ஒன்றில் அவ்வாறே தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டு எல்லோராலும் ஏகோபித்து அங்கீகரிக்கப்பட்டது. எவ்வளவோ காலமாகியும் அத் தீர்மானத்தை நிறைவேற்றுவோரைக் காணோம். நிற்க, கோம்பைக் கிளைச்சங்கத்தின் முதலாவது பொதுக்கூட்டத்தின் அறிக்கையில் பத்திரிகையின் அவசியத்தைக் குறிப்பிடப்பட்டிருந்ததை தங்கள் நினைவுக்குக் கொண்டுவருகிறேன். அடுத்த ஆண்டில் அவ்வாறே தேவாரம் அறிக்கையிலும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தை யெல்லாம் கவனித்தால், நமது சங்கத்திற்கு அவசியமாகவும் அவசரமாகவும் பத்திரிகை யொன்று வேண்டும் என்பது சாதாரண அறிவுள்ள எவருக்கும் தெளிவாகத் தோன்றும்.

“அழுகின்ற பிள்ளை பால் குடிக்கும்” என்று ஓர் முதுமொழி உண்டு. அழுவதென்றால் கண்ணீர்மட்டும் விடுவதல்ல; வாய்விட்டுக் குறைகளைக் கதறுவதாம். பத்திரிகைகளுக்கு “வாய்” என்ற மறு பெயர் உண்டு. எந் நாடு பத்திரிகைகளை ஆதரிக்கவில்லையோ, அந் நாடு வாயற்று ஊமையாய்க் கிடக்கிறதென்று சொல்லுவதில் தடையென்ன? அந் நாட்டால் அழவும் முடியாது; அந்நாட்டார் பாலுங்குடியார் என்பது திண்ணம். இனியேனும் இதையறிந்து நாட்டிற்கு நலஞ்செய்யும் பத்திரிகைகளை உண்மையான முறையில் அபிமானிக்கவேண்டும். நாட்டின் விடுதலைக்கு இது ஒன்றே நல்ல மார்க்கமாகும். நமது சங்கத்தின் குறைகளைச் சொல்லிக்கொள்வதற்கும், அவைகளைத் தீர்ப்பதற்கு வழிகள் தேடுவதற்கும், நாம் உயர்வு அடைவதற்கும் பத்திரிகையே சிறந்த கருவி யென்பதை அங்கத்தினர் அனைவரும் மனதிற் கொள்ள வேண்டும்.

ஒருவர் ஒரு விஷயத்தில் முயற்சித்தால் அவர் முயலும் வழி சரியா, அதனால் பயன் விளையுமா என்று ஆழ்ந்து கவனித்துப் பார்த்து நன்மையுண்டாகும் முறை யென்று கண்டால் அது எத்தகைய எளியோனால் தொடங்கப்பட்டாலும் சரியே அதை எல்லோரும் ஆதரித்துப்போற்றி வெற்றி பெறச்



செய்கிறார்கள் அயல்நாட்டில். இதை ஏன் நமது நாட்டில் நமது நன்மைக்காக நாம் பின்பற்றக்கூடாது?

விவசாயத்தில் ஓர் சிறிய பிரிவாகிய ஏல விவசாயத்தைப் பற்றி ஒரு தனிப் பத்திரிகை பதிப்பித்து நடத்துவது மிக்க கஷ்டமான காரியம் என்பது எனக்குத் தெளிவாகத் தோன்றினும், தொண்டு என் ஜீவிய நோக்கமாதலால், உழைப்பு நல்ல பள்ளிக்கூடம் என்ற பெரியோர் வாக்கியத்தைக் கவனித்து, காலக்கிரமத்தில் எல்லாம் சரியாய்ப்போய்விடும் என்று ஆழ்ந்து எண்ணி, கொஞ்ச காலம் ஒரு சமூகப் பத்திரிகை நடத்தி, பல பத்திராதிபர்களிடம் சில காலம் பழகி, பத்திரிகை நடத்த அற்ப அனுபவம் அடைந்திருக்கிறபடியால், சங்கத்தின் அங்கத்தினர்களாகிய தங்களுடைய மேலான ஆதரவை நம்பியே, நான் இவ் ஊழியத்தை, இப்பெரும் பாரத்தைச் சிரமேற்கொள்கிறேன். பத்திரிகையின் பாடு என்னுடையது, பயன் தங்களுடையது; குற்றம் என்னுடையது, ஏற்றம் தங்களுடையது; பத்திரிகையின் இகழ்ச்சி என்னுடையது, புகழ்ச்சி தங்களுடையது; பத்திரிகையின் துன்பம் என்னுடையது, இன்பம் தங்களுடையது; பத்திரிகையின் தோல்வி என்னுடையது, வெற்றி தங்களுடையது. ஒரு வார்த்தையில் சொன்னால் பத்திரிகையின் வேலை என்னுடையது, பத்திரிகை தங்களுடையது. சங்கத்தின் தங்கள் சிறிது பணம் பத்திரிகை வடிவமாக மாறி பாரெங்கும் மணக்கட்டும். இப் பத்திரிகை இப்பொழுது மாசிகையாக வெளிவருகிறது. முன்னவனே முன்னின்றால் முடியாத காரியம் இல்லையாகையால், கடவுள் செயலால் காலம்வரின் வாரப் பதிப்பாக்கிக் கொள்ளலாம்.

பிற தேசத்தில் அநேக சங்கங்களின் சார்பாக நட பெறும் பத்திரிகைகள் போல, தென்னிந்திய ஐக்கிய தோட் டக்காரர்கள் சங்கம் (The United Planters' Association o Southern India) நடத்துகிற “பிளாண்டர்ஸ் கிரானிகள்” (Th Planters' Chronicle) போல, நமது தேனொழுகும் தாய்த் தமி பாஷையில் திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் ஆதினத்தின்

கிழ் கால, தேச, வர்த்தமானங்களுக்குத் தக்கவாறு புத்தம் புதிதான யோசனைகளையும், முறைகளையும், பல பெரிய இயக்கங்களையும் நம்முன் நடத்த வேண்டுமென்று கூறிக்கொண்டு நடப்பு விஷயங்களைத் தாங்கிக்கொண்டு " ஏல விவசாயி " என்ற திரு நாமத்துடன் விளங்கும் இப் பத்திரிகையைத் தங்களுடைய மேலான பார்வைக்காக, அன்பான ஆதரிப்புக்காக அனுப்பப்பட்டிருப்பதற்கு அங்கத்தினர்கள் அனைவரும் அன்பும் ஆதரவும் அளித்து, ஊக்கமும் உற்சாகமும் உண்டாக்கி, பத்திரிகையை என்னாளும் வளர்ந்து ஓங்கும்படி செய்து, சங்கத்தின் கௌரவத்தை நிலை நாட்டும்படியாகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ரா. நாராயணஸ்வாமி,

ஆசிரியர்.



# நோக்கங்கள்.

1. திருவாங்கூர் ஏல விவசாய சங்கங்கத்தின் தீர்மானங்களையும், அறிக்கைகளையும் வெளியிடுவது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கிய நாணய சங்கங்களின் தீர்மானங்களையும், அறிக்கைகளையும் வெளியிடுவது.

3. சங்கத்தின் குறைகளை எடுத்துக் காட்டுவதுடன், வேண்டிய சீர் திருத்தங்களை அறிவிப்பது.

4. ஏல விவசாயிகளின் கஷ்டங்களையும், நஷ்டங்களையும் சர்க்காருக்கு எடுத்துக் கூறி, அவைகளை நீக்கும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்வது.

5. திருவாங்கூர் ஏல விவசாயிகளை திருவாங்கூர் வாசிகள் போல் பாவிக்கப்பட வேண்டுமென்ற சர்க்காருடன் வாதாடுவது

6. திருவாங்கூர் சட்ட சபையில், பிரஜா சபையில், பொருளாதார சபையில் நமது சங்கத்தின் பிரதிநிதிகளை ஏற்றுக்கொள்ளுமாறு கவர்ண்மெண்டைக் கேட்டுக்கொள்வது.

7. சில இலாக்காக்களின் ஊழல்களையும், அதிக்கிரமங்களையும் கண்டித்து, அவைகளை நிவர்த்தி செய்யும்படி சர்க்காரை வற்புறுத்துவது.

8. திருவாங்கூர் கவர்ண்மெண்டு கெஜட்டில் ஏல விவசாயிகளைக் குறித்தும், தேவிகுளம் டிவிஷன் சம்மந்தப்பட்டும் பிரசுரமாகும் முக்கிய விஷயங்களை மட்டும் வெளியிடுவது.

9 தேவிகுளம் டிவிஷனில் தமிழையும் கோர்ட்டு போதபாஷைகளில் ஒன்றாக ஏற்படுத்தப் போராடுவது.

10 சாஸ்திரியமாக, அனுபவமாக ஏலவிவசாயத்தைப்பற்றி அறிஞர்கள், அனுபோகஸ்தர்கள் எழுதும் கட்டுரைகளை வெளியிடுவது.

11 ஏல விவசாயத்தைப் பற்றிய ஆராய்ச்சிகள் உலகத்தில் எங்கு நடைபெறினும் அவைகளைக் கண்டுபிடித்துப், பிரசுரிப்பது.

12 ஏலக் கிருஷியைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதியிருப்பவைகளை மொழிப் பெயர்த்து வெளியிடுவது.

13 ஏல விவசாயத்தைப் பற்றித் தமிழில் இதுவரையும் புஸ்தகங்கள் கிடையாதாகையால், ஏலக் கிருஷி விஷயமாகப் புஸ்தகங்களை அறிஞர்களைக்கொண்டு வெளியிடும்படி செய்வது.

14 ஏல விவசாயத்தைத் தவிர மிளகு, வாழை, இஞ்சி, காப்பி, எலுமிச்சை, ஆரஞ்சு, சணல் முதலியவைகளை உதவிக் கிருஷியாகச் செய்ய உற்சாகமூட்டுவது.

15 உயரிய பல பழக்க வழக்கங்களை உண்டாக்குவது.

16 கிராம வாழ்வின் நிலைமையை உயர்த்துவது.

17 ஐக்கிய இயக்கத்தைக் காமதேனுவெனப் போற்றி அதைப்பற்றி அரிய கட்டுரைகளை அடிக்கடி வெளியிடுவது.

18 இப்பொழுதிருக்கும் விவசாயிகள் சங்கத்தை விவசாய சங்கமாகவும், வியாபார சங்கமாகவும் விரிப்பதற்கு வேண்டியவைகளைச் செய்வது.

19 ஏலத்தை எங்கே, என்ன செய்கிறார்கள் என்று அறிவிப்பது.

20. ஏலக்காயை திராவகரூபமாக்கி இங்கிருந்து அனுப்பக்கூடிய முறைகளைக் கையாளக் கூறுவது.



21. ஏலத்திலிருந்து ரசாயன முறைப்படி திராவகம் (Tincture of Cardamum) எடுக்க அயல் நாடுகளில் பயின்று வருமாறு ஏல விவசாயிகளின் மக்களுக்கு உதவிசெய்து அனுப்ப உற்சாகிப்பது.

22. கால. தேச, வர்த்தமானங்களை அனுசரித்து எழுதப்படும் வியாசங்களை வெளியிடுவது.

23. வியாபார தந்திரங்களைக் கண்டுபிடித்து, அவைகளைக் காக்க புதிய முறைகளைக் கூறுவது.

24. மத்திய வியாபாரிகளின் தொந்திரவின்றி, திருவாங்கூர் ஏல விவசாயிகள் தங்கள் ஏலத்தைக் கடையில் இறக்குமதி செய்யும் அயல்நாட்டுப் பெரிய வியாபாரிகளுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள முயற்சிக்கச் செய்வது.

25. ஏல விவசாயிகளுக்கு நன்மை செய்த பெரியோர்களின் சரித்திரங்களை வெளியிடுவது.

29. திருவாங்கூர் சரித்திரத்தை வெளியிடுவது.

27. முதலாளி, தொழிலாளி இருவருக்கும் இடையில் அன்பை அதிகப்படுத்தி, ஒற்றுமையை வலுக்கும்படி செய்வது.

28. மலையில் ஸ்திர வாசமிருப்பவர்களுக்கு வேண்டியவைகளைக் கூறிக்கொண்டிருப்பது.

29. மலைகளில் நாகரிகமற்று பூர்வ குடிகளாக வசிக்கும் முதுவான், ஊரளி, பளியன், மலைஅரசன் முதலிய ஜாதியார்மீது கருணைகாட்டி, உதவி செய்யும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்வது.

30. ஏல விவசாயிகளின் வழியில் வந்த கற்றுத் தேர்ந்த வாலிபர்களுக்குத் தக்கவாறு உத்தியோகங்கள் கொடுக்குமாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்வது.

சொற்ப கட்டணத்தில் துப்பாக்கி லைசென்ஸ் இலகுவாக அனுமதிக்குமாறு வேண்டுவது.

32 மலைப் பிராந்தியங்களில் ஜனங்கள் ஏராளமாக வசிக்குமிடங்களிலெல்லாம் வைத்திய வசதிகள் ஏற்படுத்தும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்வது.

33 ஏலத் தோட்டக்காரர்களின் புஸ்தகாலயம்(The Card-amcm Planters' Library.) என்ற பெயருடன் ஒரு புஸ்தகசாலைத் திறக்க முயலச்செய்வது.

34 ஏலக் குடியானவர்களுடைய நன்மையையே முதன்மையாகக் கருதி. இப்பத்திரிகை பதிப்பிக்கப்படுவதால், எப்பொழுதும் அன்னாரது வாழ்விற்குப் பேருழியம் செய்வதே பெருநோக்கமாகக் கொள்ளுவது.

35 ஆராய்ச்சியின்பயனாக நூதனமாகக் கண்டு பிடிக்கப்பட்ட ஆயுதங்களில், ஏலக் கிருஷிக்கு வேண்டியவைகள் இருந்தால் அவைகளை அறிந்து வெளியிடுவது.

36 பல பங்குகளாகச் சேர்த்து கூட்டு வியாபாரம் ஒற்றுமையுடன் செய்யுமாறு நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருப்பது.

37. சங்கத்திற்குத் தடையாக நிற்பவர்களையும், பங்கம் விளைவிப்பவர்களையும் நிர்தாட்சண்யத்துடன் கண்டித்து, அவர்களை வழிக்குக் கொண்டுவந்து, சத்தியத்தை நிலை நாட்டுவது.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.



# புது வருட ஆசிகள்.

வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மைவந் தெய்துக! தீதெலாம் நலிக!
அறம் வளர்ந் திடுக! மறம் மடி வுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நந்தே யத்தினர் நாடோறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்! (பாரதியார்.)

ஆவணக்காப்பக
159605

# ஏலவிவசாயிகளுக்கு விஞ்ஞாபனம்.

ஏல விவசாயிகளின் முன்னேற்றத்தைக் கருதி, பெரியகுளந் தாலுகாவின் மத்தியிலிருந்து ஓர் பத்திரிகையை வெளிப் படுத்தி வந்தால், திருவாங்கூர் ஏல விவசாயிகளுக்கும், [illegible]

பக்கங்களிலுள்ள ஏல விவசாயிகளுக்கும் இப்பத்திரிகை யுண்டாக்கி, ஏல மகசூல்களை நல்ல விலைக்கு விற்கவும், ஏல விவசாயத்தை நூதன முறைகளில் விருத்தி செய்யவும் உதவுவதாகுமென்று "திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கப்" பொதுக் கூட்டங்களில் அநேக முறை பேசித் தீர்மானிக்கச் செய்த பலனில் காணுவொருவன்.

திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கத்தின் மூலமாக ஓர் பத்திரிகையைப் பிரசுரப்படுத்த வேண்டுமென்று தீர்மானங்கள் நிறைவேறி யிருக்கின்றதே யொழிய, அதற்குரிய வேலையைச் செய்பவரில்லாமல் "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது" என்றபடி தீர்மான ரூபத்தில் நின்று இப்பெருங் குறையை நிவர்த்திக்க எனது தாபக நண்பரும், ஏல விவசாயிகளின் முன்னேற்றத்தில் ஸதா சிந்தனை யுள்ளவருமாகிய தேவாரம் ஸ்ரீமான் ஏ. நாராயண ஸ்வாமி செட்டியார் அவர்கள் கோம்பை, தேவாரம் கிளைச் சங்க நிர்வாகிகளுக்குப் பத்திரிகையின் அவசியத்தை விளக்கிக் காட்டி அச்சங்கங்களின் உதவியை எதிர்பார்த்து, இம் மாத வெளியீடை (ஏல விவசாயி) பிரசுரப்படுத்த முன்வந்திருக்கிருர்கள்.

எழுபது, எண்பது ஆயிரம் ஏக்கர் ஏலக் கிருஷிப் பூமிகளில் சுமார் 40,00,000, 50,00,000 ரூபாய் பெருமான மகசூல்களை உண்டாக்கும் 2,000 க்கு அதிகமான அங்கத்தினர்கள் சேர்ந்துள்ள திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கத்திற்கு ஓர் மாதாந்தச் சஞ்சிகையேனு மில்லாதிருப்பதை எவரும்ஒப்புக் கொள்ளமாட்டார்கள்.

திருவாங்கூர் ஏல விவசாயிகளுக்கு மட்டுமல்ல, வெளியிடங்களிலுள்ள ஏல விவசாயிகள் சகலருக்குமாக ஓர் பத்திரிகை நடைபெற்று வந்தால் எவ்வளவோ நன்மைகளுண்டாகுமென்பதை நான் விளக்கிக் காட்டத் தேவையில்லை.

எந்தச் சிறு விஷயத்திற்கும் பலருடைய உதவி தேவையாயிருந்து வரும்போது, ஓர் பத்திரிகை நடத்துவதற்கு எத்தனை ஜனங்களுடைய உதவியும், அபிமானமும் தேவையென்பதை ஏல விவசாயிகள் அனைவர்களும் சிந்தித்துப் பார்க்க



வேண்டும். அவ்வாறு சிந்தனை செய்து பார்த்தால் ஏராளமான பணமும், போதுமான சந்தாதார்களும், வேண்டிய உபகரணங்களும் அளவு கடந்து வேண்டியிருக்குமென்று அனைவர்களும் ஒப்புக் கொள்வார்கள்.

வெகு ஜன ஆதரிப்பும், பணத் தென்பும் போதுமானபடி கிடைத்து வந்தால் மாத்திரமே பத்திராதிபர்களும், ஆசிரியர்களும் தங்கள் பொறுப்பை யுணர்ந்து, பொது ஜன நன்மைக் குகந்த வழியில் வேலை செய்ய முடியும். இல்லாவிட்டால் இன்று டாம்பீகமாக வெளிப்பட்டு, அடுத்த நாளில் இருந்த விடந் தெரியாமல் மறைந்துபோய் விடுமென்பது நிச்சயம்.

ஏல விவசாயிகளின் முன்னேற்றத்தை நாடிப் பிரசுரப்படுத்தும் இப் பத்திரிகைக்கு ஒவ்வொருவரும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து "ஏல விவசாயி" நீடூழி நின்றுலவக் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

உ. ம. சே. முகியித்தீன் பிள்ளை ராவுத்தர்,

கோம்பை.

# ஏல விவசாயிகளுக்கோர் விண்ணப்பம்.

நான் குடியானவன். எனது கூட்டத்தாரே உலகில் பெரும்பான்மையோரென்று நினைக்கும்போதெல்லாம் சந்தோஷப் படுகிறேன். இதுமட்டோ, நான் பிறந்த தேசமோ ஒரு பெரிய விவசாயக் கண்டம். அதிலும் சகல வளங்களும் பொருந்திய இந்திய நாட்டில், பண்டைக் காலந்தொட்டு வாழையடி வாழையென வந்த விவசாயக் கூட்டத்தில் நானொருவனென்று சொல்லிக் கொள்வதைத் தவிர்த்து வேறு என்ன பலன் நான் பிறந்ததிற்கு வேண்டியிருக்கிறதென்றெண்ணியெண்ணி நான் அக மகிழ்கிறேன்.

சகோதரர்களே, நான் வீண் பெருமை பாராட்டுகிறேனில்லை. உள்ளதை உள்ளபடி சொல்கிறேன். தன்னை மறந்து கிடக்கிறவர்களைத் தட்டி யெழுப்ப ஆசைப்படுகிறேன். உலக சிருஷ்டிப்பில் பாரத பூமி மட்டும் விவசாயத்திற்கென்று பிரத்தியேகம் ஆக்கப் பட்டிருக்கிறது. சகல வளங்களும் பொருந்தி நிற்கிறது. பூர்வீக யாத்ரீகர்களும், சரித்திரக்காரர்களும், ஷேக்ஸ்பியர், மில்டன் போன்ற கவி வாணர்களும் இந்திய விவசாயத்தில் எவ்வளவு மேம்பாடடைந்து, எவ்வளவு தூரம் அந்நிய நாடுகளுடன் வியாபாரப் போக்குவரத்துச் செய்திருக்கிறதென்பதற்குச் சாட்சியாகத் தங்கள் தங்கள் கிரந்தங்களில் மறைபொருளாகக் காட்டி யிருக்கிறார்கள். உலக சிருஷ்டிப்பில் பாரத பூமி ஒரு மாதிரிப் பண்ணைக்குகந்த யிடமென்று இப்பொழுது பலர் போற்றி வருகிறார்கள். சில தேசங்களில் மலை வளமில்லை; சில நாடுகளில் மண் வளமில்லை; சில யிடங்களில் நீர் வளமில்லை. ஒரு



பக்கத்தில் நெல் விளைகிறதில்லை; ஒரு பக்கத்தில் கோதுமை விளைவதில்லை. நமது தாய் நாடோ! அறிவாளர்களே, குமரியிலிருந்து இமாலயம் வரை சென்று பாருங்கள். உலகத்தில் நாலா பக்கங்களிலுமுள்ள விதவிதமான மண் தினுசுகளும், மரஞ் செடி தினுசுகளும் பரந்து, செறிந்து கிடக்கின்றன. பிரபஞ்சத்தில் எங்கெங்கேயோ காணப்படுகிற செடி கொடி வகைகளை யெல்லாம நம் பிரிய நாட்டிலேயே கண்டு களிக்கலாம். இப்பேறு மற்றெந்த நாட்டிற்கும் கிடையாதென்றும் உறுதியாய்ச் சொல்லலாம். ஏன், பல பேசியாவதென்ன? இந்தியா இப்பரந்த பூமிககு ஒரு நந்தவனம் போன்றும், மரஞ் செடி கொடிகளடர்ந்த கண்காட்சித் தோட்டமென்றும் சொல்லிக்கொள்ள எந்த மனிதனும் ஒத்துக்கொள்ளாது போக மாட்டான். இப்பேர்க்கொத்த சகல வளங்களிருப்பதினாலேயல்லவோ தாவர சாஸ்திரிகளைப் பொறுத்த மட்டிலும் நேற்றும் இன்றும் இந்தியாவிலேயே. அவர்கள் விருத்தியாகிக் கொண்டு வருகிறார்கள். தாவர வாராய்ச்சி விஷயமாக இந்தியக் குடியானவன் எவ்வளவு தூரம மேல் சென்றிருக்கிறானென்பதை விரித்தெழுத இங்கே சமயமில்லாது போயினும், நான் ஒன்றிரண்டு மட்டும் காட்ட விரும்புகிறேன். அதின் மூலமாகச் சீர்கேடடைந்து, இன்னது செய்வோமென்ற திட்டத்தை யாராய்ந்து பார்க்காது அந்நிய நாட்டிலிருந்து வந்து புதிதாய் ஏலக் கிருஷியிலீடுபட்டவர்களின் யோசனையை எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் எனது சகோதர ஏல விவசாயிகளுக்கு ஞாபக மூட்ட நான் ஆசைப்படுகிறேன். ஏல விவசாயத்தை முதன் முதலில் நாமே கையாண்டு வந்திருக்கிறோமென்பதை முதலில் கவனிப்பில் வைத்துக் கொள்வதோடு, வியாபாரத்திலும் முன்னேற்றமடைந்த நம்மவர் இதிலும் முன்னேற வியலுமென்பதையும் தெரிவித்துக் ள்கிறேன். நாமே விவசாய உலகத்திற்கு டாக்டர் போல்

போன்ற மேதாவிகளினுதவியால் வழி காட்டியாக நின்று நூதன முறைகளைக் காட்டக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். ஆராய்ச்சிக்குரிய சகல கருவிகளும் இங்கேயே இருக்கின்றன. அவ்வாயுதங்கள் பழக்கமின்றித் துருப்பிடித்து மழுங்கிக் கிடக்கின்றன. மிகுதியும் கெட்டுப்போவதிற்கு முன் அவைகளைக் கையாண்டு; துருக்களைக் களைந்து, நமக்கும் பிறர்க்கும் பிரயோசனப்படும்படி செய்து கொள்ள இன்னும் முடியாது போகவில்லை. நாமே பண்டைக் காலத்திய விவசாயிகள். நமது குடியானப் பெண்களோ, கொல்லைப் புரத்திலுள்ள காயாத மலட்டு அவரைச் செடிகளின் உண்மையை யறிந்து, காய்க்க வைத்திருக்கிறார்கள். நமமவர்களோ காயாத பலா, மா மரங்களை அதிர்ச்சியினால் காய்க்கச் செய்திருக்கிறார்கள். நம் குடியானவர்களே பயிருக்கு எசமானைத் தெரியுமென்று கண்டிருக்கிறார்கள். உலகம் ஞானார்த்தத்தை எப்படி ஆசியாவிலிருந்து எதிர்பார்த்துக் கொண்டு நிற்கிறதோ அதே போன்று விவசாயச் சீர்திருத்தத்தை நம்மிடத்திலிருந்தே மற்றவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

சகோதரக் குடியானவர்களே, நம்முடைய ஒற்றுமையினால் சாதிக்க முடியாததைச் சாதிக்கக் கற்றுக்கொண்டோம். முன்னேற்றமுள்ள ஒருவனுக்கு அவனுடைய வழி துறையில் இடைஞ்சல்கள் பல எதிர்ப்படுவது சகஜம். நம்முடைய தைரியத்தை நழுவ விட்டு விடாதபடி, யாபேரும் ஏகோபித்து இன்னும் கூடுதல் உற்சாகத்துடன் நமக்காக நமது தலைவர்கள் பாடுபாட ஒத்தாசை செய்வோமாகில், நாம் இட்டது சட்டமென்ற நிலைமைக்கு எளிதில் வந்து விடலாம். வழி திறந்து கிடக்கிறது. நம்மை எதிர்ப்போர் வெகு சிலரேயாவார். சுய நலங் கருதாது உழைக்கத் தயாரிலிருப்பவர் சிலர் முன்னிலையில்



நின்றுகொண்டிருக்கிறார்கள். அவர்களில் காணும் சில சிறு குற்றங்களுக்காக அவர்களை நீங்கள் புறக்கணிக்காதேயுங்கள்; அவர்களை நம்புங்கள்; அவர்களைக் கௌரவியுங்கள். நம்பிக்கையும் கௌரவமும் ஒரு சனசமூகச் சேவகர்களை எவ்வளவு தூரம் சேவை செய்யத் தூண்டி யிருக்கின்றன வென்பதைப் பல தேசத் தலைவர்களின் சரித்திர மூலமாகத தெரிந்து, நம தலைவர்களைக் கை தூக்கி விடுங்கள்.

ஏல விவசாயச் சங்கத்திற்குத் தற்சமயம் ஒரு பெரிய ஆபத்து எதிர்ப்பட்டு நிற்கிறதென்று பலர் திகிலடைந்து நிற்கிறார்கள். வாஸ்தவந்தான். இப்பொழுது சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் தனது உறக்கத்தினின்றும் கிளம்பி சங்கக் கப்பலுக்கு உதவி செய்யக் கடமைப்பட்டிருககிறார். சங்கக் கப்பல், வியாபாரிகளின் சூழ்ச்சிக் காற்றினால் யிழுக்கப்பட்டுப் பாதளத்துக்குள்ளிழுக்கப்படினும் இழுக்கப்படலாம். கப்பலோட்டிகள் தைரியஸ்தர்கள்; உண்மையாளர்கள். ஆயினும் சங்கத்தின் ஒவ்வொருவருடைய ஒத்தாசையையும் அவர்கள் இப்பொழுது எதிர்பார்த்து நிற்கிறார்கள். தலைவர்களுக்குள் உற்சாகம் குறைந்து காண்கிறது; காரணமோ யோசித்துப் பார்த்தால் நம்மிடத்திலேயே யிருக்கிறது. நாமே அவர்களைப் பொறுப்பிற்காளாக்கினோம்; நாமே இப்போது அவர்களை அவநம்பிக்கைப் பட ஆரம்பிக்கிறோம். ஆராய்ந்தாலோசியாமல் அவசரப்பட்டு அவர்களை ஒன்று செய்யக் கேட்டுக்கொள்கிறோம். அவர்கள் இன்னது தான் செய்வதென்று தெரியாமல் திகைத்து நிற்கிறார்கள். அனுபவமில்லாத ஒரு சிலர் சங்க நிர்வாகப் பொறுப்பை யேற்றுத் தங்களால் நடத்த யியலுமென்று கருதி, தேர்ந்து பொறுக்கி யெடுத்து நிர்ணயித்த தற்சமயத் தலைவர்களைக் கீழே யிறக்க ரகசியமாக அங்கத்தினர்களுக்குள் அவநம்பிக்கை யேற்

படும் வண்ணம் மறைவாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். என் பிரிய ஏலக்குடியானவர்களே! இது ஒரு ஆபத்தான சோதனைக் காலம். விழித்துப் பாருங்கள்! நாமே நம்மை யாக்கவும், அழிக்கவும் ஆளாகிறோம். சங்கத்தின் சகல கட்டுத் திட்டங்களுக்கு நாம ஆளாகியிருக்கிறோம். தலைவர்களுக்கு உற்சாகத்தை யூட்டி, வெளியே யனுப்புங்கள்; அவர்கள் வெற்றிமாலையுடன் திரும்பி வந்து, அம்மாலையை நமக்குச் சூட்டி ஆநந்திப்பார்கள். நம்மைப் பொறுத்த மட்டில் அவர்கள் நடந்து கொள்ள அவர்களுக்குத் தெரியாது போய்விடுமா? நாம் கொடுத்த பொறுப்பை பெற்று அவர்கள் வேறு வழியாக நம்மை ஆள எண்ணுவார்களா? உண்மையான பொறுப்பை யுணர்ந்த சனசமூகத் தொண்டன் அகங்காரத் தலைவனென்று தன்னைப் பிறத்தியார் நினைப்பதற்கு முன்னமே தானே தன்னுடைய பொறுப்பை விட்டு விட்டு வேறு சென்று விடுகிறான். இதுபோக இன்னும் ஒரு விஷயத்தை மட்டும் எழுதிச் சங்கத்தின் ஆராய்ச்சிக்கு விட நான் பிரியப்படுகிறேன். அதாவது கால மாறுபாட்டினால் சங்கம் ஏற்பட்ட தேதியினின்று இது காலம் வரை சரக்கை விற்பனை செய்வதிலேயே காலங் கழிக்க வேண்டியதாயிற்று. இன்னும் எவ்வாறு முடியுமோ' என்பதின் முடிவைச் சொல்ல நாம் ஒருவரும் தயாரில்லை. ஆயினும் விற்பனை சம்பந்தமாகக் கூடுதல் சிரத்தை, பலம், உற்சாக மாதியவைகளைச் செலவழிக்கக் கேட்டுக்கொள்வதோடு, யாவற்றிற்கும் மூல காரணமாகிய நம்முடைய ஜீவாதார ஏலச்செடி நாளுக்கு நாள் க்ஷீணித்துப் போவதை நினைத்து, அதற்காக ஒரு சிறிதேனும் சிரத்தை யெடுத்துக்கொள்ள நம்முடைய தலைவர்களை நாம் இரந்து கேட்டுக்கொள்வோம். சுவரில்லாது சித்திரமெழுத முடியாதென்பது நாம் எல்லாரும் அறிந்த விஷயம். ஏலச்செடியை மீட்டும் முன்னிலைமைக்குக் கொண்டு வரப்பத்



திரிகை, துண்டுப் பத்திரிகை மூலமாக ஏலக் குடியானவர்களின் உயர்ந்த அனுபவங்களை கொஞ்சமேனும் மேல கீழென் றெண்ணு பிரசுரித்துக் கூடிய மட்டிலும் பிரசாரம் செய்யக் கேட்டுக்கொள்வோம். சமசீதோஷ்ண பூமிகளில் விளைவாகும் பயிர்வகைகளைப் பரிசோதித்து நம்முடைய தோட்டங்களில் ஏலத்தைத் தவிர்த்து இன்னும் என்னென்ன துணைக்கிருஷிகள் செய்யயியலுமென்பதை ஆராய்வோம். தாவர சாஸ்திர ஆராய்ச்சிக்காக விவசாய சம்பந்தமான ஆராய்ச்சிக்காக நாடுதேசங்களுக்குத் தெரிந்தெடுத்து ஒருவர் இருவரை யனுப்பிவைக்கவியலாது போனாலும் நம் நாட்டிலேயே தேர்ச்சி பெற்ற சாஸ்திர விற்பன்னர்களிடமாவது அனுப்பி அதன் மூலம் ஏலச்செடியை பீடித்து நிற்கிற கொடிய தொத்து வியாதியை நிவர்த்திக்க வேண்டும். இவைகளுக்கெல்லாம் மேலாக, விசாயம், தாவரம இவைகளைப்பற்றிச் சொல்லும் கிரந்தங்களடங்கிய ஒரு புஸ்தக சாலையை ஏற்படுத்த வேண்டும். அங்கே நானு தேசங்களிலிருந்து வெளியாகும் கிருஷிகப் பத்திரிகைகளையும் தருவழைக்க வேண்டும். இத்துடன் ஏல விவசாயிகளின் நன்மையைக் கருதிப் பலபேருடைய அபிப்பிராயங்களை வெளியிட்டு ஏலக்கிருஷியை முன்னேற்றமடைய ஏற்பாடு செய்யலாமென்ற நோக்கத்துடன் புதிதாய் வெளிவந்துள்ள இந்த "ஏலவிவசாயி" என்ற நம்முடைய இளம்பிராயத்தானை நாமெல்லோரும் ஏகோபித்து போஷிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். இதை நடத்தத் துணிந்த திரு. **R. N** சுவாமியவர்களுக்கும் "ஏல விவசாயி" உயிரைப் பெற்றுப்ப உடன் உதவி செய்த தலைவர்களுக்கும் நம்முடைய மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**S.** வடிவேல் கௌடர்,
குப்பிரண்டு,
பொன்முடி எஸ்டேட்.

# எனது வேண்டுகோள்.

ஏல விவசாய சகோதரர்களே,

வர்த்தமானப் பத்திரிகைகளின் உபயோகங்களைப் பற்றியும், அவைகளின் இன்றியமையாமையைப் பற்றியும் பாலர் முதல் விருத்தாப்பியர் வரை ஒவ்வொருவரும் நன்குணர்ந்திருக்கும் இந்நேரத்தில், அவைகளைப் பற்றி மீண்டும் இங்கு எழுதப் புகுவது அனாவசியமென்றெண்ணியே மேற் செல்லுகிறேன்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒன்றிற்கு மேற்பட்ட பத்திரிகைகள் மலிந்து கிடக்கும் இந்நாளில், ஜனத் தொகையிலும் மற்றெத் துறையிலும் ஏனைய ஜில்லாவைக் காட்டிலும் மேம்பட்டதும், சென்னை மாகாணத்தில் அழகில் முதன்மையாயும், அளவில் இரண்டாவதாயிருக்கும் மதுரையம்பதியைத் தலைநகராகக் கொண்டதுமான நமது ஜில்லாவில் உயர்ந்த பல பத்திரிகைகள் வெளி வராமலிருப்பது விசனிக்கத் தக்கதே. மதுரை ஜில்லாவிற்கே கண்ணெனத் தகும், நீர் வளம், நில வளம், மலை வளம் மிகுந்த நமது தாலுகாவில் சமாச்சாரப் பத்திரிகைகளில்லாவிடினும் ஒரு மாதப் பத்திரிகையாவது தோன்றாமலிருப்பது நம் தாலுகா வாசிகளின் உற்சாகமின்மையே. 2000 மெம்பர்களுக்கு மேலிருக்கும் நமது திருவாங்கூர் ஏல விவசாய சங்கத்திற்குப் பத்திரிகை அவசியம், அவசியம் என்று அநேக தடவை அநேகர் பேசி, கடைசியில் பொதுக் கூட்டமொன்றில்



பத்திரிகை நடத்தத் தீர்மானித்து, காகிதத்தில் சில வருஷங்களுக்கு முன் எழுதி வைத்ததைத் தவிர, இதுவரைக் காரியத்தில் காட்டாதது மிக, மிக வருந்தத் தக்க விஷயமாகும்.

பத்திரிகை நடத்தி அனுபவமும் ஆற்றலும் அடைந்திருக்கும் எனது சிறந்த நண்பர் ஸ்ரீமான் நாராயணஸ்வாமி செட்டியாரவர்கள் பத்திரிகையில்லாக குறையை நீக்கக் கருதி, ஏலக் குடியானவர்களின் முன்னேற்றத்தைக் குறியாகக் கொண்டு "ஏல விவசாயி" என்ற மகுடமிட்டு, இம் மாதாந்தப் பத்திரிகைப் பதிப்பிக்க முன் வந்திருப்பது நமது அதிர்ஷ்டவசமேயாகும். ஆசிரியர் தேவாரம் ஸ்ரீமான் நாராயணஸ்வாமி செட்டியாரவர்களை ஏல விவசாயிகள் அனைவரும் நன்கறிவார்களாகையால், அவரை இங்கு அறிமுகம் செய்துவைக்க அவசியமில்லை. நமக்காகப் பத்திரிகையொன்று வெளிவருவது, நமது சங்கத்தின் அபிவிருத்திக்கு ஒரு சுப அறிகுறியே.

நம்மிடையில் உண்டாகும் பல்வேறு அபிப்பிராய பேதங்களை நமக்கு நன்கு தெரிவிக்கவும், விவசாய, வியாபார, கைத்தொழில் முறைகளையும், சீர் திருத்தங்களையும் அறிவிக்கவும், இது ஒரு இன்றியமையாத சாதனமென்று நான் சொல்லாமலே தங்களுக்கு விளங்கும். இப் பத்திரிகையில் நாமடையப் போகும் நன்மைகள் அநேகம் என்று நான் சொல்லாமலிருக்க முடியவில்லை.

நமக்காகவே உழைக்க முற்பட்டுள்ள இப் பத்திரிகைக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோமாகையால், ஒவ்வொரு ஏல விவசாய அங்கத்தினரும் ஆதரித்து, பத்திரிகையை யென்றும் வளர்த்து வருவோமாக.

பத்திரிகாசிரியரும், பத்திரிகையும் பல்வளம் பொருந்தி, நீடூழி வாழ ஆண்டவன் அருள் புரிவானாக.

பொ. நாகூர் மீரா ராவுத்தர்,
காரியதரிசி,
ஏல விவசாயிகள் ஐக்கிய பாங்க், கம்பம்.

# பத்திரிகைகளும் அவற்றின் பயனும்.

தேசத்திலுள்ள ஜனங்களைத் தட்டி எழுப்பி, தேச முன்னேற்றத்திற்குரிய வழிகளில் உணர்ச்சிபெற்று வாழும்படி செய்வதற்கு முக்கிய சாதகமாயுள்ளவை வர்த்தமானப் பத்திரிகைகளேயாம். நாகரீகம் எவ்வளவுக்கெவ்வளவு விருத்தியாகின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு பத்திரிகைகளும் வளர்ச்சியடைவதியல்பு. நாகரீகம் மிகுந்த ஐரோப்பிய நாடுகளில் அபரிமிதமான பத்திரிகைகள் தோன்றியுலாவுகின்றன. ஆங்கில நாகரீகத்தின் பலனாக நம நாட்டிலும் பல பத்திரிகைகள் நடந்தேறிவருகின்றன. ஆங்கிலத்திலும், மற்ற தேச பாஷைகளிலும் தோன்றிய பத்திரிகைகள் அநேகம். அவற்றில் பல பத்திரிகைகள் சில நாள்வரையில் நடந்தேறி நின்றுவிட்டன. மற்றும் பற்பலவித இடையூறுகளில் சிக்குண்டு, ஒருவாறாக நடைபெறுகின்றன. சில பத்திரிகைகள் மாத்திரம் நம நாட்டில் தீவிரமாக உழைத்து வருகின்றன. பத்திரிகைகள் இவ்வாறாக நின்றுவிடுவதற்கும், நன்கு நடைபெறுவதற்கும் முக்கிய காரண கர்த்தர்கள் யாரென்று ஆராயுமிடத்து சந்தாதாரர்களே யாவர் என்று விளங்குகின்றது. சந்தாதாரர்களுடைய ஊக்கமும், உதவியும் எவ்வளவுக்கெவ்வளவு அதிகரித்திருக்குமோ, அவ்வளவுக்கவ்வளவு பத்திரிகையின் பெருமையும் அதிகரிக்கும். சாதாரணமாக ஒரு பத்திரிகையை ஆதரிப்பதற்குக் குறைந்தது ஆயிரம் சந்தாதாரர்களாவது இருக்கவேண்டும். செல்வாக்கும், நன்மதிப்புமுடைய பத்திரிகைக்கு ஏராளமான சந்தாதாரிருந்தாலன்றி, அப்பெருமை அதற்குக் கிடைப்பதருமையே. மூல தனத்



தைக்கொண்டு பத்திரிகையை நடத்துவதெனத் தீர்மானிக்கப்போதிலும், அக்காரியம் ஏராளமான சந்தாதாரர்களை எதிர்நோக்கிச் செய்வதாயிருக்கவே சிறக்கது. சந்தாதாரரில்லாது எவ்வளவு தான் மூலதனத்தை வைத்துப் பத்திரிகையை நடத்திய போதிலும், அது நாற்புறமும் வலித்துக் கட்டிய கயிறின்றிய கழைக் கூத்தனது கம்பத்தைப் போலாகும். உலக உபகாரமாக உழைப்பதாயினும் அது சில நாளில் நின்றுவிட நேரிடும்.

“ஜஸ்டிஸ்” கக்ஷி தோன்றிய நாட்களில் ஏராளமான மூலதனத்தை ஆதாரமாய்க்கொண்டு சந்தாதாரருடைய பணத்தை எதிர்பாராமல “திராவிடன்” என்ற தமிழ் தினசரிப் பத்திரிகையும் “ஆந்திரப் பிரகாசிகை” என்னும் தெலுங்கு தினசரிப் பத்திரிகையும் தோன்றி, நாடெங்கும் பரவித் தீவிரமாக நியாய உணர்ச்சியை ஊட்டிப் பல்லாயிரம் மக்களைக் கண் விழிக்கச்செய்து கீர்த்திபெற்றன. ஆயினும் சில காலத்திலேயே அவ்விரண்டும் வலிமை குன்றி நின்றுவிடும் நிலைமைக்கு வந்து ஒருவாறாக வாரப்பத்திரிகைகளாக உலாவத்தொடங்கின. “ஆந்திரப் பிரகாசிகை” ஏற்கனவே வாரப் பத்திரிகையாக நடத்தப்பட்டு வந்ததாதலின், அது பழையபடி வாரப் பதிப்பாகவே நடந்து வருகின்றது. திராவிடனோ பற்பல இடையூறுகளில் சிக்குண்டு மறைவாய்ப்பட்டு, மீண்டும் சில கனவான்களின் பொருளுதவியினால் தினசரியாக ஒருவாறு நடைபெற்று வருகின்றது. ஆயினும் மற்ற தேசியப் பத்திரிகைகளோடு போட்டி போட்டுக்கொண்டு உலாவ முடியாமலிருக்கின்றது. ஆகையால் மூலதனமிருந்தால் பத்திரிகையின் அபிவிருத்திக்குப் போதாது. மூல தனத்தால் பத்திரிகை பிறக்கவேண்டும். சந்தாதாரருடைய கைகளால் அது வளர்க்கப்பட வேண்டும். பத்திரிகையின் வளர்ச்சிக்குச் சந்தாதாரர்களே முக்கிய காரணராகின்றனர்.

ஆதரிப்பாரின்றியே அநேக பத்திரிகைகள் நாட்டில் குன்றிவிடுகின்றன. தெலுங்கு நாட்டில் மிக அருமையான பத்திரிகைகளெல்லாம் ஆதரிப்பாரின்றியே நின்றுவிட்டன. நம் தமிழ் நாட்டில் "தேச பக்தன்" என்ற தினசரிப் பத்திரிகைத் திருவாளர் கல்யாணசுந்தர முதலியாரவர்களின் தலைமையில் மிக மும்முரமாக உழைத்து ஓர் புத்துணர்ச்சியை நாட்டில் நாட்டியது, காலக் கொடுமையால் அது நின்றுவிட்டது. திருவாளர் நாராயணசாமிசெட்டியாரவர்களின் தலைமையில் நடைபெற்று வந்த "தேவாங்க மித்திரன்" என்ற மாதப் பத்திரிகை தேவாங்கர்களுக்குள் ஒரு நூதன உணர்ச்சி உண்டாக்கியதெனினும் ஆதரிப்பாரின்றியே ஆசிரியரை அலக்கணுறச்செய்து அடங்கிவிட்டது. நம் தேசம் அடிமையினின்றும் விலகிச் சுதந்திரமாக வாழவேண்டுமென்று கருதி அதற்குரிய யோசனைகளால் அல்லும் பகலும் முழ்கி, தேச மக்களுக்கும் அவ்வுணர்ச்சி யூட்டி, "சேரவாரும் ஜகததீரே" என்று ஒருங்கே யழைப்பதற்குப் பத்திரிகையே முக்கிய சாதனமாகுமெனக்கருதி, தேச பக்தர்கள் தமது சுயநன்மையைப் பறக்கடித்துப் பொது நலத்தை நாடிப் பத்திரிகையை நடத்தத் தொடங்கினால் அதை யாதரிப்பது பெரும்பாலோருக்குக் கஷ்டமாயிருந்தால், என் செய்வது? குறைந்த சந்தாவாயிருந்தால் நலம் என்று சிலருக்குத் தோன்றக்கூடும். அதுவும் ஏராளமாக ஆதரிப்பாரிருந்தாலன்றி ஒரு பத்திரிகைக் குறைந்த சந்தாவுடன் நடத்தப்படமாட்டாது. நம் நாட்டின் ஜனத்தொகையைக் கவனிக்குமிடத்து இன்னும் ஏராளமான வர்த்தமானப் பத்திரிகைகள் தோன்றி யுலாவினாலன்றி, நம் தேசம் விரைவில் முன்னேற்றமடைய மாட்டாதெனக் கூறவேண்டியிருக்கிறது. வர்த்தமானப் பத்திரிகைகள் எவ்வளவுக்கெவ்வளவு பெருகுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு ஜனங்களுக்குள் உணர்ச்சி யுண்டாகும். அவ்வித புதிய புதிய உணர்ச்சிகள் உண்டானாலன்றி நமது அடிமைத்தனம் தொலையமாட்டாது. அடி



மைத்தனம் ஒழிந்தாலன்றி சுகம் கிடையாது. ஆகவே சுகமாகவும் தன் மதிப்புடனும் வாழுவதற்கு நாம் அடிமையினின்றும் விலகப் பாடுபடவேண்டும். அவ்வாறு பாடுபடுவதில் ஒருவரையொருவர் கலந்து கொண்டாலன்றி முடியாத காரியமாம். அவ்வாறு வெவ்வேறு நாடுகளிலுள்ளோர் அபிப்பிராயங்களைப் பற்றி ஆராய்வதற்கு ஒரு பொது ஸ்தானம் அவசியமாகும். அத்தகைய ஸ்தானம் பத்திரிகையே யாகும்.

பத்திரிகையைப் போல உதவி செய்யக் கூடியவர் நாட்டில் எவருமே யிலரென்று கூறி விடலாம். பத்திரிகை நண்பனாகவும் ஆசிரியனாகவும், பெருந்தலைவனாகவும் தூதனாகவும, ஏவலாளியாகவும, நியாயாதிபதியாகவும், அரங்க மேடையாகவும், இருக்கிறதென்று கூறலாம. நம் நாடு இவ்வளவு நாகரீகத்தோடிலங்குவதற்குக் காரணம் பத்திரிகைகளேயாம். பத்திரிகை நடமாடும் நகரங்களெல்லாம் நாகரீகமுற்று விளங்கும். சிறியதோர் கிராமத்தில் வசிப்பவனாயினும் அவன் பத்திரிகை யுணர்ச்சியுடையவனாயின் அவனுள்ளத்தில் உலகமே அடங்கியிருக்கும். அவனது செயல்கள் பரந்த நோக்கமுடையன வாயிருக்கும். எவ்விஷயத்தையும் நன்கு ஆராயும் குணமும் பொருந்தியிருக்கும். இவ்வாறெல்லாமிருப்பதே நாகரீகத்திற்கு அறிகுறி. நாகரீகமில்லாத மனிதனுக்கு இக்குணங்களேற்படா. இவை யுண்டாவதற்குப் பத்திரிகையே யாதாரம். பத்திரிகை படிக்காத மனிதன் பாதி மனிதனே ஆவான். எவ்வளவு பெருங் கல்வி கற்ற புலவனாயினும், கூட்டிப் படிக்க மாத்திரம் தெரிந்த சாதாரண மனிதனாயினும பத்திரிகை யுணர்ச்சியளவில ஒரே சம நிலையை யடைகின்றனர். பத்திரிகை உயர்வு தாழ்வுகளைச் சமப்படுத்தும் மட்டக்கோலென்றும் செப்பலாம். பெருங் கல்வி யாளனாயினும் பத்திரிகை யுணர்ச்சியின்றேல் அவன் பரந்த நோக்க முடையவனாதலரிது. பத்திரிகைகளில்

உண்டாகும் பயன்கள் எண்ணிறந்தன. வர்த்தமானப் பத்திரிகைகளால் பாஷாபிவிருத்தி செய்துகொண்டோர் அநேகர்; அரசியல், சமூக சீர்திருத்தம் முதலிய பல்வேறு கலைகளில் பயிற்சி பெற்றோர் அநேகர். மதியைப் பெருக்கி, உலகியலறிவை யூட்டி பாஷா ஞானத்தையும், தேசாபிமானத்தையும் வளர்ப்பிக்குமோர் கருவி பத்திரிகையே. தேசத்தின் மூலை முடுக்குகளிலுள்ளவர்களைத் தட்டியெழுப்பிப் பொதுமன்றத்திற் கிழுத்து வருவதும் பத்திரிகையே. அவ்வப்போது ஏற்ற அபிப்பிராயங்களால் அகமகிழச்செய்வதும் பத்திரிகையே. பலருடைய கொள்கைகளைப் பரப்பக் காட்டுவதும் பத்திரிகையே. பல்லோர் கருத்துகள் பொலிந்து விளங்குவதற்குத் தாயகமாயிருப்பதும் பத்திரிகையே. அலைகடலுக் கப்பாலுள்ள செய்திகளை அகத்திற் கொண்டுவந்து புகுத்துவதும் பத்திரிகையே. குறுகிய அறிவாளிகளைப் பேரறிவாளராகச் செய்விப்பதும் பத்திரிகையே. உலக விஷயங்களைக் காட்டும் கண்ணாடியாக விளங்குவதும் பத்திரிகையே. இருக்குமிடந் தேடி வருவதால் பத்திரிகை தூதனாகும். அரிய செய்திகளை யறிவிப்பதால் ஆசிரியனாம். ஆலோசனைகளை வெளிப்படுத்துவதால் தோழனாம். குணதோஷங்களை யாராய்வதால் நியாயாதிபதியாம். பத்திரிகையின் பயன் இத்தன்மையது, அத்தன்மையது என்று இயம்பிக்கொண்டிருப்பதைவிடக் கடந்த 70, 80 ஆண்டுகளுக்கு முன்னர் நம் தேசம் எப்படிப்பட்ட நிலைமையிலிருந்தது? இப்போது எத்தகைய நிலைமையிலிருக்கிறது? என்பதைப்பற்றிச் சிந்தித்துப் பார்த்தால், பத்திரிகையின் பிரயோசனம் இத்தன்மையதென விளங்கிவிடும். பத்திரிகையைக் காண்போர் பல மகாசபைகளைப் பார்க்கின்றனர். பத்திரிகைகளைப் பார்ப்போர் பல மேதாவிகளின் இயல்புகளை யறிகின்றனர். மற்றும் எவ்வளவோ பிரயோசனத்தைப் பெற்று, மனிதத் தன்மையுடன் விளங்குகின்றனர். ஆதலின் பத்திரிகை மற்றெல்லாவற்றினும் முதன்மையா



கப் பாராட்டத் தக்கதாகும். இப்பிரயோசனங்களைக் கருதியே தேசத்தில் பல மேதாவிகளால் பல பத்திரிகைகள் நடத்தப்படுகின்றன.

இப்பொழுது "ஏலவிவசாயி" என்ற பெயருடன் இப்பத்திரிகை தோன்றியிருப்பது ஏலவிவசாயிகளுக்குப் பெருமை பயப்பதுடையதாகும். நம்முன்னேற்றத்திற்கு விவசாயம், கைத்தொழில், வியாபாரம், சிற்பம் முதலிய பலவேறு துறைகளையும் நல்ல நிலைமைக்குக் கொண்டுவரப் பத்திரிகைகள் தோன்ற வேண்டும். நாட்டின் நன்மையெல்லாம் விவசாயத்திலேயே அடங்கிக் கிடக்கின்றன. விவசாயம் பெருகினால் நாட்டில் பஞ்சங்கள் ஏற்படாதிருக்கும். அரசுக்கு ஆதாரமாயிருப்பதும் விவசாயமேயாம். இதனாலேயே "செங்கோலைக் காக்குங் கோல் ஏருழுங் குடியின் கோலே" என்ற வாக்கியமும் ஏற்பட்டிருக்கிறது. இவ்விதப் பெருமையுடைய விவசாயத் தொழில் ஒரேமாதிரியாகவும், ஒற்றுமையாகவும், நாகரிகமாகவும் நன்கு நடைபெறுவதற்கு அவர்களின் சார்பாகப் பத்திரிகை வெளிவருதலானது வேண்டற்பாலதே. ஸ்ரீமான் நாராயணசாமி செட்டியாரவர்கள் இப்பத்திரிகையை நடத்துவதற்குப் பெருமுயற்சி கொண்டிருக்கிறார். ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் நல்ல தேசாபிமானமும், ஊக்கமும், உற்சாகமும் உடையவராயிருப்பதால், இவருடைய தலைமையில் நன்கு நடைபெறுமாதலால் இப்பத்திரிகையை யாதரிக்க ஏலவிவசாயிகளெல்லோரும் முந்துவார்களென்று நம்புகிறேன். தமிழ்நாட்டு மக்களனைவரும் இப்பத்திரிகையை யாதரித்து, இதன் ஆசிரியராகிய அன்பர் ஸ்ரீமான் செட்டியாரவர்களுடைய உற்சாகத்தைப் பெருக்கி, நாட்டின் நலத்திற்குத் துணைபுரிவார்களாக. எல்லாம் வல்ல இறைவன் திருவாங்கூர் ஏலவிவசாயிகள் சங்கத்தை ஓங்கி வளரச்செய்து, "ஏலவிவசாயி"க்குத் துணைபுரிந்து எங்கும் பரவச்செய்து, என்றுங் குன்றாப் பெருமையுடன் உழைத்துப் பெரும் புகழுடையுமாறு கடைக்கணித்தருளக் கடவன்.

ஏ. ராமஸ்வாமி.

## சங்கங்களும் அவற்றின் பயனும்.

உலகின் பற்பல பாகங்களிலும் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெற்று வருகலை நாம் காண்கிறோம். மனித சமூகம் முன்னேற்றமடைவதற்குச் சங்கங்களின்றியமையா சாதனங்களாகும். நமது தேசத்தின் தற்கால நிலைமை மிக்க கேவலமானதென்பது யாவருமறிந்த உண்மையே. இதனைக் குறித்து யான் இங்கு அதிக மெழுத வேண்டுவதில்லை. சமயச் சண்டை, சாதிச் சண்டை முதலான பூசல்களும், ஏழைகளின் இன்னல்களும் பிறவும் மிகுந்து, நாட்டைச் சீர்கெடுக்கும் இந்நாளில் சங்கங்களே முற்பட்டுத் தேச நன்மைக்காக உழைத்தல் வேண்டும்.

ஒரு தனி மனிதன், ஒரு வேலையைச் செய்வதினும் சிலர் சேர்ந்து, அவ் வேலையைச் செய்வது சுலபமான காரியமாகும். அன்றியும், சங்கமானது மனிதனிடத்துள்ள தன்னலம், பொறுமை முதலான கெட்ட குணங்களை நீக்க வல்லது. ஒருவரோடொருவர் சேர்ந்து பழகுவதால், இந்தக் கெட்ட குணங்கள் நீங்கி அன்பு, பொறுமை முதலான நற்குணங்கள் மனித உள்ளத்தில் விருத்தியாகும். ஆகவே நாம் எந்தவிதமான தொழிலையும் சுலபமாகச் செய்து கொள்வதற்குச் சங்கமே ஏற்றதொரு

சென்னை-600 006.
1594605
N27.1.1